சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 20.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-15 |
| சாட்சியின் பெயர் | : | ரஞ்சனிபிரியா |
| கணவர் பெயர் | : | சந்திரமௌலி |
| கிராமம் | : | ஆயக்காரன் புலம் |
| தாலுக்கா | : | வேதாரண்யம் |
| தொழில் | : | மகப்பேறு மருத்துவர் |
| வயது | : | 37 |

2026 ம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கடந்த 19.03.2025 ஆம் தேதி மதியம் 01.18 மணியளவில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிரிருந்தபோது திருத்துறைப்பூண்டி, அண்ணா நகர், ஜீவா தெருவை சேர்ந்த சுமார் 19 வயதுடைய நந்துதாஷினி என்பவரை அவரது சகோதரி என கூறி சுகுணா என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் என்னிடம் தனது சகோதரி அன்றைய தினம் மதியம் 12.50 மணி வாக்கில் அவரது வீட்டில் தூக்கிட்டு கொண்டதாக கூறினார். நான் மேற்படி நந்துதாஷினியை பார்வையிட்டேன். அவர் ஏற்கனவே இறந்திருந்தார். உடனே நான் விபத்து பதிவேடு ஒன்று பதிவு செய்துவிட்டு பிரேதத்தை நான் பிரேத அறையில் வைக்க ஏற்பாடு செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் நந்துதாஷினியின் பார்வையிட்டதில் அவர் தூக்கிட்டு கொண்டதற்கான

கழுத்து பகுதியில் துணி இருக்கியதற்கான அடையாலம் தெரிந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.ஆ-10 ல் எனது கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. நான் என்ன பதவி வகிக்கிறேன் என்பதற்கான சீல் வைக்கபடவில்லை. அவசியமும் இல்லை. இந்த ஆவணத்தை காவல் துறையினரால் தாயர் செய்ய முடியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த ஆவணம் நான் கொடுத்த ஆவணம் தான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.20 18:44:38 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.